

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 28-08-2023


# இந்திய நாட்டுக்கும்.. தமிழ் இனத்துக்கும்...

நிலவில் இறங்கிவிட்டது இந்தியா. சந்திரயான் விண்கலத்தின் லேண்டரானது வெற்றிகரமாக நிலவில் இறங்கிவிட்டது. இந்திய விண்வெளித் துறையின் மகத்தான மாபெரும் சாதனைகளில் ஒன்று கடந்த 23 ஆம் நாள் நிகழ்த்தப்பட்டு விட்டது.

**“உலகின் கனவுலகம்தான் நிலவு. பூமியின் வாழும் மனிதன், நிலவிலும் வாழ முடியுமா என்ற கற்பனையில் ஆழ்ந்திருக்கிறான். உலக நாடுகளுக்கு, நாடுகளைப் பிடித்தலை விட நிலவை அறிதல் மிகப்பெரிய வேலையாகவே எல்லாக் காலமும் இருந்துள்ளது. நிலவு குறித்த ஆராய்ச்சியும் நிலவுக்கு விண்கலம் செலுத்தி நிலவை முழுமையாக அறிதலும் - தெளிதலும் மிகவும் ஆர்வம் மிக்க துறையாகவே இருந்து வருகிறது. சோவியத் ஒன்றியம், அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளின் வரிசையில் இதோ இந்தியாவும் கால் பதித்து விட்டது. இந்தச் சரித்திர சாதனையை சந்திரயான் செய்து விட்டது.**

நிலவைத் தொட்ட நான்காவது நாடு இந்தியா. 1959 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியமும், 1964 ஆம் ஆண்டு அமெரிக்காவும், 2013 ஆம் ஆண்டு சீனாவும் இந்த சாதனையைச் செய்துள்ளன. 2008 ஆம் ஆண்டு நிலவை நோக்கிய பயணத்தைத் தொடங்கிய இந்தியா, 2023 ஆம் ஆண்டில் சாதனையின் எல்லையை அடைந்திருக்கிறது. மற்ற நாடுகளுக்கு இல்லாத சிறப்பு, இதுவரை அறியப்படாத நிலவின் தென் துருவப் பகுதியை சந்திரயான் - 3 தரையிறங்கி ஆராயத் தொடங்கி இருப்பதுதான்.

மற்ற நாடுகள் நிலவை ஆய்வு செய்வதை விட, இந்தியா தனது ஆராய்ச்சியைத் தொடங்கியது மிக அவசியமானது. ஏனென்றால் இங்குதான் நிலவைப் பற்றிய கற்பனைகள் அதிகம். நிலவை பாம்பு விழுங்குவதால் கிரகணம் ஏற்படுவதாக நம்பப்பட்ட நாடு இது. இங்கேதான் இதுபோன்ற ஆய்வுகள் அதிகம் தேவைப்படுகின்றன.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமானது தனது மகத்தான சாதனைகளைத் தொடர்ந்து செய்து வருகிறது. 2008 ஆம் ஆண்டு அக்டோபர் 22 ஆம் நாள் பி.எஸ்.எல்.வி.சி. - 11 ராக்கெட் விண்ணில் (சந்திரயான் 1) செலுத்தப்பட்டது. இது முதன்முதலாக நிலவின் சுற்றுப்பாதைக்குள் நுழைந்தது. நிலவில் தண்ணீர் இருப்பதாக கண்டறிந்தது. சந்திரயான் - 2 2019 ஆம் ஆண்டு அனுப்பி வைக்கப்பட்டது. இதில் நிலவைச் சுற்றி வருவதற்கான தொழில் நுட்பங்கள் இணைக்கப்பட்டு இருந்தன. ஆனால் அந்த தொழில் நுட்பம் கைகொடுக்கவில்லை. நிலவின் தரையில் மோதி செயல் இழந்தது.

சந்திரயான் - 3 தயாரிக்கும் திட்டத்தில் நமது அறிவியல் அறிஞர்கள் இறங்கினார்கள். நிலவின் மேற்பரப்பில் இறங்கி ஆய்வு செய்வதற்கான லேண்டரும் ரோவரும் இதில் இணைக்கப்பட்டது. நிலவை நோக்கிய இதன் பயணம் வெற்றிகரமாக நிறைவேறிவிட்டது. சூலை 14 ஆம் நாள் தொடங்கிய இந்த நிலவுப் பயணம், ஆகஸ்ட் 23 ஆம் நாள் இலக்கை அடைந்துவிட்டது. நிலவில் இறங்கிய நான்காவது நாடு என்றும் - நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கிய முதல் நாடு என்றும் இந்தியா பெருமை கொள்கிறது. இந்திய நாட்டு மக்கள் அனைவரும் பெருமை பொங்கச் சொல்லிக் கொள்ள வேண்டிய நிகழ்வாகும் இது.

இஸ்ரோ எனப்படும் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் தலைவணங்கத் தக்கது. சுதந்திர இந்தியாவில் அணு சக்தித் துறைதான், அறிவியல் துறையாக தொடக்கத்தில் இருந்தது. இதில் விண்வெளி அறிவியலையும் ஒரு துறையாக இணைக்கக் காரணமாக இருந்தவர் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு அவர்கள். 1961 ஆம் ஆண்டில் இம்முடிவு எடுக்கப்பட்டது. அடுத்த ஆண்டே டாக்டர் விக்ரம் சாராபாய் தலைமையில் தனிக்குழு உருவாக்கப்பட்டுவிட்டது. திருவனந்தபுரம் அருகே தும்பா ஏவுகளம் அமைக்கும் முயற்சிகள் முதலில் தொடங்கியது. 1963 ஆம் ஆண்டு முதல் ராக்கெட் ஏவப்பட்டது. விண்வெளியில் முதல் பயணம் இதுதான். பிரதமர் இந்திராகாந்தி ஆட்சி காலத்தில் 1969 ஆம் ஆண்டு இஸ்ரோ எனப்படும் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமாக இது பெரும் வளர்ச்சியை அடைந்தது. அணுசக்தி துறையில் இருந்து பிரித்து, விண்வெளித் துறையின் கீழ் கொண்டுவந்ததும் பிரதமர் இந்திராகாந்திதான். விண்வெளி ஆணையத்தையும் இவர் உருவாக்கிக் கொடுத்தார். இதன் காரணமாக சொந்தமாக ராக்கெட், செயற்கைக் கோள் தயாரிக்கும் நாடாக இந்தியா வளர்ந்தது. உயர்ந்தது. உயரத்துக்கு போய்விட்டது இந்தியா.

**இதில் தமிழ் இனத்துக்கு என்ன பெருமை என்றால் சந்திரயான் - 1 திட்டத்தின் இயக்குநராக நியமிக்கப்பட்டவர் மயில்சாமி அண்ணாதுரை. 2008 அக்டோபர் 28 ஆம் நாள் அது நிலவைச் சுற்றத் தொடங்கியது. நிலவில் நீர்க்கூறுகள் இருப்பதை இதுவே கண்டறிந்து சொன்னது.**

**சந்திரயான் - 2 ஆனது 2019 சூலை 15 ஆம் நாள் ஏவப்பட்டது. இதன் திட்ட இயக்குநராக வனிதா முத்தையா செயல்பட்டார். அந்தக் காலக்கட்டத்தில் இஸ்ரோ தலைவராக இருந்தவர் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த சிவன்.**

**இப்போது ஏவப்பட்டது சந்திரயான் - 3. இதன் திட்ட இயக்குநர் வீரமுத்துவேல். “நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் விழுப்புரத்தில்தான். அரசுப் பள்ளியில் 10ம் வகுப்பு வரை படித்தேன். பள்ளியில் நான் ஒரு ஆவரேஜ் மாணவன். அடுத்து எங்க படிக்கணும், என்ன படிக்கணும் என்பது குறித்து எந்த ஒரு ஐடியாவும் எனக்கு இல்லை. அம்மா, அப்பா மற்றும் குடும்பத்தினர் யாரும் படித்தவர்கள் இல்லை. நண்பர்களுடன் சேர்ந்து டிப்ளமோ மெக்கானிக்கல் இன்ஜினிரிங் சேர்ந்தேன்.” என்று சொல்லி இருக்கிறார் வீரமுத்துவேல்.**

**இது தமிழ் இனத்தின் பெருமையாகும். தாய்மொழியில் படித்து, விண்ணுக்கு உயர்ந்தவர்கள் இவர்கள். ‘தமிழ்நாட்டு கல்வி முறை சரியில்லை’ என்று சில தற்குறிகள் சொல்லி வரும் நிலையில் நிலவில் சாதிப்பதன் மூலமான அறிவு கொண்டது தமிழ்நாட்டுக் கல்வி முறை என்பதை நிரூபிக்கும் வாய்ப்பாகவும் இது அமைந்துவிட்டது.**

இந்திய நாட்டுக்கும் தமிழ் இனத்துக்கும் பெருமை சேர்க்கும் நிலவுப் பயணம் தொடரட்டும். கற்பனைக் கதைகள் முடியட்டும்.

●●



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.08.2023) நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் மகள் செல்வப்பிரியா–விக்னேஷ் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர். இரா. முத்தரசன், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ. மதிவாணன். தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத் தலைவர் என். கௌதமன், சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கே.கலைவாணன். கே.மாரிமுத்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவாரூர் மாவட்டச் செயலாளர் வை.செல்வராஜ், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் கோ.பழனிச்சாமி, சிவபுண்ணியம், பத்மாவதி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

### ‘இதயம் காப்போம்’ திட்டத்தின் வாயிலாக

# கடந்த இரண்டு மாதங்களில் - 1721 பேர் பயனடைந்துள்ளனர்!

### மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெருமிதம்!

நாகர்கோவில், ஆக. 28 -

‘இதயம் காப்போம்’ திட்டத்தின் வாயிலாக கடந்த இரண்டு மாதத்தில் 1721 பயனாளிகள் பயனடைந்துள்ளனர் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவர் பி.என். ஸ்ரீதர், தலைமையில், நாகர்கோவில் மாநகர மேயர் ரெ.மகேஷ் முன்னிலையில் நேற்று (27.08.2023) நாகர்கோவில் கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் துறை சார்பில் புதிய கட்டிடங்களை திறந்து வைத்து, குத்துவிளக்கேற்றியும், புதிய கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டி செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் குறிப்பிட்டதாவது :



கன்னியாகுமரி மாவட்ட மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.90 இலட்சம் மதிப்பில் 1735 சதுர அடியில் தரை மற்றும் முதல் தளங்களுடன் 100 நோயாளிகளுடன் இருப்பவர்கள் தங்கும் அறையினையும், ரூ.60 இலட்சம் மதிப்பில் கணபதிபுரம் ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டிடத்தினையும், ரூ.50 இலட்சம் மதிப்பில் இடைக்கோடு பகுதியில் ஆரம்ப சுகாதார நிலைய - வட்டார பொது சுகாதார அலகு கட்டிடத்தினையும், ரூ.30 இலட்சம் மதிப்பில் உடையார்விளையில் புதிய துணை சுகாதார நிலைய கட்டிடமும் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.2 கோடி மதிப்பில் 2840 சதுர அடியில் தரை மற்றும் 3 தளங்களுடன் ஆயுர்வேத மருந்து செய் நிலைய கட்டிடத்திற்கும், ரூ1.10 கோடி மதிப்பில் ஆறுதேசம் புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்திற்கும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.6 கோடி மதிப்பில் 32 படுக்கைகள் மற்றும் 2 அறுவை சிகிச்சை அரங்கம் கொண்ட கட்டிட பணிகள், ரூ.50 இலட்சம் மதிப்பில் முட்டம் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம், ரூ.50 இலட்சம் மதிப்பில் செண்பகராமன்புதூர் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம், ரூ.60 இலட்சம் மதிப்பில் பழுகல் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம், ரூ.75 இலட்சம் மதிப்பில் குழித்துறை ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம், ரூ.75 இலட்சம் மதிப்பில் பத்மநாபபுரம் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் உள்ளிட்ட ஆரம்ப சுகாதார நிலை கட்டிடங்களும், ரூ.30 மதிப்பில் நெல்லிக்காவிளை துணை சுகாதார நிலைய கட்டிடம், ரூ.35 இலட்சம் மதிப்பில் வன்னியூர் துணை சுகாதார நிலைய கட்டிடிடம் என மொத்தம் மொத்தம் ரூ.9.75 கோடி செலவில் 8 மருத்துவ கட்டிட பணிகளும் நடைபெற்று வருகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 02.12.2009 அன்று துணை முதலமைச்சராக இருந்தபோது கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியினை 50 மாணவர்கள் சேர்க்கையுடன் தொடங்கி வைத்தார்கள். பின்னர் 2016-17 ஆண்டு முதல் மாணவர்கள் சேர்க்கை - 60 ஆக உயர்த்தப்பட்டது. தற்போது மொத்தம் 300 மாணவ மாணவியர்கள், 60 உள்ளுறை பயிற்சி மருத்துவர்கள் பயின்று வருகின்றனர். உள்ளுறை பயிற்சி மருத்துவர்களுக்கு ஊக்கத்தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.25,000 வழங்கப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்களின் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் 4 மாணவியர்கள் பயன் பெற்று வருகின்றனர். 7.5% ஒதுக்கீடு திட்டத்தின்கீழ் 9 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இதுவரை மொத்தம் 350 ஆயுர்வேத மருத்துவர்கள் இளங்கலை பட்டங்கள் பெற்றுள்ளனர். தற்போது 180 மாணவிகள், 50 மாணவர்கள் கல்லூரி விடுதிகளில் தங்கி கல்வி பயின்று வருகின்றனர்.

கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் பரப்பளவு 4.75 ஏக்கர் பரப்பளவில், 23.01.2006 அன்று தொடங்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு மே மாதம் முதல் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக செயல்பட தொடங்கியது. இம்மருத்துவமனையில் 100 படுக்கைகள், நாள் ஒன்றுக்கு 400 புறநோயாளிகள், 140 உள்நோயாளிகளுக்கு சிசிச்சை அளிக்கப்படுகிறது. இம்மருத்துவமனையில் பக்கவாதம், வாதநோய்கள், சிறுநீரகல், தோல் நோய்கள், தீராத நாள்பட்ட புண்கள், மூலம், பௌத்திரம், சைனஸ், கண்பார்வை குறைபாடு, குழந்தையின்மை, மாதவிடாய் கோளாறுகள், மூளைவளர்ச்சி குறை பாடு கொண்ட குழந்தைகள், ஆட்டிசம், எலும்பு முறிவு உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது. அனைத்து ஆயுர்வேத பஞ்சகர்மா சிகிச்சைகள், ஆயில் மசாஜ், மூலிகை ஒத்தடம், சிரோ வஸ்தி, சிரோ தாரா முதலிய சிகிச்சைகள் மற்றும் பல்வேறு பரிசோதனைகள் இலவசமாக வழங்கப்படுகிறது. டாம்கால் நிறுவனம் மூலம் ஒவ்வொரு ஆண்டும் ரூ.92 இலட்சம் மதிப்புடைய மருந்துகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கொரோனா காலத்தில் சிறப்பாக செயல்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.65 இலட்சம் செலவில் 3 துணை சுகாதார நிலையங்கள், ரூ.22 இலட்சம் செலவில் வடசேரி நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொது சுகாதார ஆய்வக கட்டிடம், ரூ.2.80 கோடி செலவில் கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், கூடுதல் நூலக கட்டிடம், நோய் தடுப்பாற்றல் பகுப்பாய்வு கருவி ஆகிய மருத்துவ சேவைகள் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பயன் பெற்று வருகின்றனர்.

202324 ஆம் ஆண்டு மானியக்கோரிக்கை அறிவிப்பின் படி சிறுநீரக செயலிழப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் பரிசோதனை ரூ. 2 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். சிறுநீரில் வெளியேறும் புரதத்தின் அடிப்படையில் ஆரம்ப நிலையிலேயே சிறுநீரக செயலிழப்பை கண்டறியும் பரிசோதனை அனைத்து துணை சுகாதார நிலையங்களிலும் ரூபாய் 2 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 10 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் ரூ.2.5 கோடி செலவில் கட்டிட பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 06.06.2023 அன்று நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட 5 இடங்களில் நகர்ப்புற நலவாழ்வு மையங்களை திறந்து வைத்தார்கள். நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பெருவிளையில் புதிதாக நகர்புற ஆரம்ப சுகாதாரநிலையம் அமைக்கப்பட உள்ளது.

2021-22 மானியக்கோரிக்கையின்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 14.04.2022 அன்று சென்னை, இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் ரூ.364.22 கோடி மதிப்பில் 35 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 18 மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் 139 அரசு மருத்துவமனைகளுக்கு பன்முக உயர்தர தீவிர சிகிச்சை பிரிவுகள், 2099 படுக்கைகளுடன் தொடங்கி வைக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் 20,03,460 மக்கள் தொகையில் 2,94,317முதல் சேவையும், 9,40,991 தொடர் சேவையும், 99.2% பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்னுயிர் காப்போம் திட்டத்தின்கீழ் 3 அரசு மருத்துவமனை, 11 தனியார் மருத்துவமனையில் இதுவரை 2,479பயனாளிகளுக்கு ரூ.8.85 கோடி அரசு தொகை வழங்கப்பட்டுள்ளது. கலைஞர் வரும்முன் காப்போம் திட்டத்தின் கீழ் 2021-22-ம் ஆண்டு 31 முகாம்கள் நடத்தப்பட்டு 12,172 பயனாளிகளும், 2022-2023 - ம் ஆண்டு 31 முகாம்கள் நடத்தப்பட்டு 27,864 பயனாளிகளும், 2023-24ம் ஆண்டு 31 முகாம்களுக்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு இதுவரை 20 முகாம்கள் நடத்தப்பட்டு, 21,301 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

இதயம் காப்போம் திட்டமானது ரூ.3.37 கோடி மதிப்பில் தமிழகம் முழுவதும் இருதய நோயினால் ஏற்படும் உயிரிழப்பினை தடுக்கும் பொருட்டு 27.06.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், மலுமிச்சம்பட்டி ஊராட்சியில் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இருதய பாதுகாப்பு மருந்துகளாக 2 ஆஸ்பிரின், 4 க்ளோபிடோக்ரல், 8 அட்ரோவாஸ்டாட்டின் என மொத்தம் - 14 மாத்திரைகள் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கடந்த இரண்டு மாதத்தில் 1721 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

மானியக் கோரிக்கை அறிவிப்புகள் 2023-24ன் படி ரூ.45.12 கோடி மதிப்பீட்டில் 29 அறிவிப்பு களின் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிற்கு பல்வேறு மருத்துவ கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

மானியக் கோரிக்கை அறிவிப்புகள் 2023-24ன் படி கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.23.75 கோடி மதிப்பில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டிடம், ரூ.2 கோடி மதிப்பில் நவீன மருத்துவ உபகரணங்களுடன் உள்கட்டமைப்பு வசதிகள், ரூ.80 இலட்சம் மதிப்பில் நவீன வசதிகளுடன் கூடிய “கட்டணப் படுக்கைகள்” (Pay Wards), ரூ.40 இலட்சம் மதிப்பில் உடற்கூறாய்வு மையங்கள், குலசேகரம் அரசு மருத்துவமனையில் ரூ.5.60 கோடி மதிப்பில் புதிய கட்டிடம், இராஜாக்கமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் ரூ.40 இலட்சம் மதிப்பில் இந்திய மருத்துவ முறை புறநோயாளி பிரிவுகள் தரம் உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஆணையர் (இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை) மைதிலி கே. ராஜேந்திரன், நிகழ்ச்சியில் விஜய் வசந்த் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.ஜி.பிரின்ஸ், ராஜேஷ் குமார், எம்.ஆர்.காந்தி, நாகர்கோவில் மாநகராட்சி துணை மேயர் மேரி பிரின்சி லதா, ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.பிரின்ஸ் பயஸ், கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஜெ.கிளாரன்ஸ் டேவி, துணை இயக்குநர் மரு.மீனாட்சி, இணை இயக்குநர் பிரகலாதான், மாமன்ற மண்டல தலைவர்கள் திருமதி.அகஸ்டினா கோகிலவாணி, திரு.ஜவஹர், கண்காணிப்பாளர் மரு.அருள்பிரகாஷ், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹெலன் டேவிட்சன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள். எப்.எம். ராஜரத்தினம், புஷ்பலீலா ஆல்பன், வழக்கறிஞர் சதாசிவம், மருத்துவர்கள், செவிலியர்கள், மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏண்ணே; “கவர்னர் எல்லாம் ‘ரப்பர் ஸ்டாம்ப்’ அல்ல; ஒரு மசோதாவை வைத்திருக்கிறார் என்றால், அதற்கு ஆயிரம் காரணங்கள் இருக்கும்” என்று, புதுச்சேரி கவர்னர் தமிழிசை, தமிழ்நாடு ஆளுநர் ரவியின் அடாவடிகளைத் தாமாகவே முன்வந்து நியாயப்படுத்தும் வகையில், ஒரு பேட்டியில் கூறியிருக்கிறாரே ?

**பட்டணம் : ஆமாம்; கவர்னர் தமிழிசை அவர்களின் வேண்டுகோளை ஏற்று, கவர்னர்களை இனி ‘ரப்பர் ஸ்டாம்ப்’ என்று அழைக்காமல், ‘ போஸ்டல் ஸ்டாம்ப்’ என்று சொன்னால் பொருத்தமாக இருக்குமா ?**

**ஜனநாயகத்தில், சட்ட மன்றமும் நாடாளுமன்றமுமே அறுதி சக்தி வாய்ந்தவை. மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் அடங்கியவை இந்த இரண்டு அவைகளும்.**

**பெரும்பான்மைப் பிரதிநிதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மசோதாவை, தனி ஒருவரான ஆளுநர் வைத்துக் கொண்டே இருப்பது, பெரும்பான்மையைக் கேலி பேசுவதாகும்; மக்களாட்சியை மாசுபடுத்துவதாகும் !**

**ஆயிரம் காரணங்கள் அல்ல, ஆயிரத்தெட்டு காரணங்களை அலசி ஆராய்ந்த பிறகே ஒரு மசோதா, வாக்கெடுப்பின் மூலம், பெரும்பான்மையோரால் நிறைவேற்றப்படுகிறது.**